# தேர்வுநெறியாளர்
# தூய வளனார் தன்னாட்சிக் கல்லூரி,
# திருச்சிராப்பள்ளி-2

---

## பருவத்தேர்வு- பிப்ரவரி 2022
## மாணவர்களுக்கான அறிவிப்புகள்

- பருவத்தேர்வுகளுக்காக உருவாக்கப்பட்டுள்ள **கூகுள் தேர்வறையைத் (GER)** தேர்வுக்கால அட்டவணைபடி மாணவர்கள் தேர்வில் கலந்துகொள்வதற்கு ஏற்றவாறு பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்
- ஒரு நாளைக்கு 2GB திறனுள்ள நல் இணையத்தொடர்பினை மாணவர்கள் பெற்றிருக்கவேண்டும். தேர்வுக்காலத்தில் தடையற்ற பதிவேற்றத்தை மேற்கொள்ளும் வகையில் பொருத்தமான இடத்தையும் இணைய சேவை வழங்குநரையும் (Internet Provider) தெரிவுசெய்து கொள்ளவேண்டும்
- கூகுள் தேர்வறையில் இணைவதற்கான அழைப்பு 26-01-2022 அன்று முடிவடைகிறது. மாணவர்கள் இணைப்புக்கான அழைப்பை ஏற்றுத் தேர்வெழுதத் தயாராக வேண்டும்
- **கூகுள் இயங்கலை வகுப்பறையில் (GLC)** மாணவர்கள் தேர்வு தொடங்குவதற்கு *15 நிமிடங்களுக்கு முன்பாக (காலை 9.15 மற்றும் 10.15மணி)* இணையவேண்டும்
- மாணவர்கள் கூகுள் இயங்கலை வகுப்பறையில் முதல் மற்றும் இறுதி அரை மணிநேரம் கண்டிப்பாக இருக்கவேண்டும். தேர்வுநேரம் முழுவதும் அதாவது விடைத்தாள்களை ஒப்படைக்கும் வரை கூகுள் இயங்கலை வகுப்பறையில் இருப்பது சிறப்பானது.
- முதல் 30 நிமிடங்களில் எடுக்கப்படுகின்ற வருகைப்பதிவின்போது வரத்தவறிய மாணவர்கள் குறிக்கப்படுவர். அவ்வாறு வரத் தவறிய மாணவர்களின் விடைத்தாள்கள் மதிப்பிடப்படாது
  - அனைத்துத் தேர்வுகளுக்கான உங்கள் விடைத்தாளின் முதல் பக்கம் அருகில் உள்ள படத்தில் உள்ளது போன்ற வடிவத்தில் இருக்கவேண்டும்
  - முதல் பக்கத்தில் காண்பிக்கப்பெற்றுள்ள பகுதியில் தான் Section-A வினாக்களுக்கு விடையளிக்கவேண்டும்
  - ஒவ்வொரு பக்கத்திலும் குறைந்தது 25 வரிகளில் விடைகள் தெளிவாகவும் ஏற்கத்தக்கனவாகவும் எழுதப்பட வேண்டும்.
  - உங்கள் விடைத்தாள்களை நல்ல வெளிச்சத்தில் ஒளிவருடல் செய்து (Scan) தெளிவான PDF கோப்பாக உருவாக்கவேண்டும். கோப்பிற்கு எத்தகைய கடவுச்சொல்லும் கொடுக்கக்கூடாது
  - கோப்பின் அளவு சிறியதாக இருந்தால் பதிவேற்றம் செய்வது எளிதாக இருக்கும். கோப்பானது 10MB அளவிற்கு மிகாமல் இருக்கவேண்டும்


St. Joseph's College (Autonomous)

Main Answer Book

(Avoid Overwriting)

- ஒளிவருடல் செய்வதற்கும் PDF கோப்பாக விடைத்தாள்களை மாற்றுவதற்கும் **Clear scan app** என்னும் செயலியைப் பயன்படுத்தலாம். உங்கள் அனைத்து விடைத்தாள்களின் PDF கோப்புகளை உங்கள் மின்னஞ்சலில் தொகுத்துவையுங்கள். தேர்வுமுடிவுகள் வெளியாகும் வரை உங்கள் உண்மையான விடைத்தாள்களைப் பத்திரமாகப் பாதுகாத்து வைத்திருங்கள்
- விடைத்தாள்களை ஒளிவருடல் செய்தல், அவற்றை PDF கோப்பாக மாற்றுதல், **துறைஎண்(Register Number)_ பாடத்தாளின் குறியீட்டு எண் (Course code)** என்னும் முறையில் கோப்பின் பெயர் அமைத்தல், கூகுள் தேர்வறையில் பதிவேற்றம் செய்தல் ஆகிய முறைமைகளைப் பின்பற்றுமாறு மாணவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள். இல்லையெனில் உங்கள் விடைத்தாள்கள் மதிப்பிடப்படாது. கூகுள் தேர்வறையில் பதிவேற்றம் செய்வதற்குமுன் கோப்பின் பெயரை இருமுறை சோதித்துக் கொள்க.
- ஏதேனும் சிக்கலிருப்பின் உங்கள் தேர்வறை மேற்பார்வையாளரைக் கூகுள் வகுப்பறையிலோ அலைபேசியிலோ தொடர்பு கொள்ளலாம். உங்கள் கூகுள் தேர்வறை மேற்பார்வையாளரைத் தொடர்பு கொள்வதற்கான விவரங்கள் கல்லூரி இணையதளத்தில் இடம்பெற்றுள்ளன.
- உங்கள் துறைத்தலைவரையோ ஒருங்கிணைப்பாளரையோ வகுப்பாசிரியரையோ தொடர்பு கொள்வது, சிக்கலுக்கான தீர்வு பெறுவதில் தாமதத்தை ஏற்படுத்தும்.
- விடைத்தாள்களை மதிப்பீடு செய்யும்போது ஏதேனும் முறைகேட்டைப் பேராசிரியர்கள் கண்டுபிடித்தால் முறைகேடு குறித்த புகார் பதிவு செய்யப்பெற்றுத் தண்டனை வழங்கப்படுவதோடு எதிர்காலத்தில் தேர்வெழுத இயலாத நிலைக்கும் உள்ளாக நேரிடும்.
- தேவை ஏற்பட்டால் மாணவர்கள் தங்கள் தேர்வறை நுழைவுச்சீட்டையும் அடையாள அட்டையையும் கூகுள் தேர்வறையில் காண்பிக்கவேண்டும். மாணவர்கள் தங்கள் தேர்வறை நுழைவுச்சீட்டைக் கல்லூரியின் இணையதளத்தினுள் உள்ள மாணவர் இயங்குதளத்தில் (Student's Portal) 28-01-2022 முதல் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- விடைத்தாள்களை ஒப்படைத்தவுடன் அல்லது தேர்வுநேரம் முடிந்தவுடன் குறிப்பிட்ட தேர்வுக்குரிய மாணவர்களின் பதிவெண்கள் கூகுள் தேர்வறையிலிருந்து நீக்கப்படும்
- இணையத் தொடர்பில் ஏற்பட்ட சிக்கல்களால் தங்கள் விடைத்தாள்களைப் பதிவேற்றம் செய்ய இயலாத மாணவர்கள் தங்கள் தேர்வறை மேற்பார்வையாளரை மட்டுமே உடனடியாகத் தொடர்பு கொள்ளவேண்டும். காரணங்கள் உண்மையானவையாகவும் ஏற்கத்தக்கனவாகவும் இருந்தால் தேர்வறை மேற்பார்வையாளர் வாயிலாகத் தேர்வுக் கண்காணிப்பாளர் அதனை ஏற்றுக்கொள்வார். தேர்வறை மேற்பார்வையாளர் வழங்கும் அறிவிப்புகளைக் கேட்டு மாணவர்கள் அவற்றிற்கேற்ப நடந்து கொள்ளவேண்டும்
- எந்தவொரு சூழலிலும் எந்தவொரு சிக்கலுக்காகவும் மாணவர்கள் தேர்வு நெறியாளர் அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளக்கூடாது. போதுமான அளவில் மாணவர்களுக்குத் துணைபுரிவதற்குரிய வழிமுறைகள் அறிக்கையில் வழங்கப்பட்டுள்ளன.

முதல்வர்

St. JOSEPH'S COLLEGE (Autonomous) Tiruchirappalli-2

தேர்வு நெறியாளர்